[1981 பிப்ரவரி 28

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அற நிலையத்தின் வருமானத்தைக் கொண்டு சுற்றுலா மாளிகைக் கட்டிடத்தைக் கட்ட இயலாது, இப்போது வரக்கூடிய வருமானத்திலிருந்து அங்கு நடத்தக்கூடிய உயர் நிலை பள்ளிக்கு $2\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் திட்டத்திலே ஒரு கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அங்கே வருகின்ற பக்தர்கள் தங்குவதற்கு விடுதிகள் கட்டவேண்டும் என்றால் அப்படி விடுதிகள் அங்கே கட்டப்படுவது பயனளிக்குமா, தேவையா என்பதைப் பற்றி அரசு முதலில் ஆராய்ந்து பார்த்தாக வேண்டும்.

வாசுதேவநல்லூர் ஒன்றியத்தில் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம்.

*வினா எண். 308—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் வாசுதேவ நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தை சிறு உழவர் மேம்பாட்டு ஏஜென்ஸி (எஸ். எப். டி. ஏ.) மூலம் மேம்படுத்தும் பகுதியாக குறிப்பிட வேண்டுமென அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) எஸ். எப். டி. ஏ. எந்த அடிப்படையில் முடிவு செய்யபடுகிறது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) தலைவர் அவர்களே, மைய அரசின் அறிக்கையைப் பின்பற்றி ஒருங்கிணைக்கப்பட்ட கிராம வளர்ச்சித் திட்டத்தோடு இணைத்து, எஸ். எப். டி. எ. எல்லா வட்டாரங்களிலும் செயல்பட இருக்கிறது,

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாசுதேவ நல்லூர் ஒன்றியம் மிகவும் பின்தங்கிய பகுதி, பெரும்பாலும் சிறிய விவசாயிகள் வாழும் பகுதி, இந்தப் பகுதியில் எஸ். எப். டி. ஏ. கிடையாது ; தன்னிறைவுத் திட்டம் கிடையாது. எனவே, அவர்களைப் பாதுகாக்கின்ற முறையிலே மீண்டும் இதைப் பரிசீலித்து, மத்திய அரசை வற்புறுத்தி அங்கே இந்த எஸ். எப். டி. ஏ. திட்டத்தையும், தன்னிறைவுத் திட்டத்தையும் அந்த பிளாக்கிலே அமுல்படுத்துவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, எஸ். எப். டி. ஏ. ஐ. ஆர். டி. பி., திட்டம் எல்லா வட்டாரங்களிலும் செயல்பட இருக்கிறது என்று குறிப்பிட்டேன். எல்லா வட்டாரங்களிலும் என்று சொல்லும்போது, அது இந்த வட்டாரத்திற்கும் பொருந்தும்.

1981 பிப்ரவரி 28]

திரு. மு. அப்பாதுரை : பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் அதற்கான பயிற்சி நடை பெறுவது அரசுக்குத் தெரியுமா? அந்தப் பயிற்சி ஒழுங்கான முறையில் நடக்காமல், ஒன்றியங்களிலே சிலரைக் கூப்பிட்டுவிட்டு, தவறான கணக்கைக் காட்டுவது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு.. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை,

உரங்களில் கலப்படம்.

*வினா எண். 309.—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 24—7—1980 அன்று தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூரில் ஒரு வீட்டில் உரத்தில் கலப்படம் செய்யும் தொழிற்சாலை நடத்தி வந்தது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவற்கு இடமில்லை.

[முற்பகல் 9.40]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்தக் கலப்படம் நடை பெறுகின்றபோது தொழிற்சாலைகள் தண்டனைக்கு உட்படுவது கிடையாது, இந்தப் பொருட்களை பெறக்கூடிய சாதாரண வியாபாரிகள், அதை விற்பனை செய்யக் கூடியவர்கள் தண்டனைக்கு உட்படுகின்றார்கள் என்ற நிலை இருப்பதால், அதை மாற்றியமைப்பதற்குத் தமிழக அரசு முயற்சியை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : கேள்வி திருக்கோயிலூரைப் பற்றியது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே 24—7—1980 அன்று தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூரில் ஒரு வீட்டில் உரத்தில் கலப்படம் செய்யும் தொழிற்சாலை நடத்தி வந்தது உண்மையா என்று கேட்டதற்கு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக தேவையான விசாரணை நடத்தப்பட்டதா? மேலும் அதுபற்றி தகவல் இருந்தால் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?